# ஈரான் அதிபர் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சரின் துயர மரணத்திற்கு இந்தியா ஒரு நாள் தேசிய துக்க தினத்தை அறிவித்துள்ளது.

மே 20, 2024

ஹெலிகாப்டர் விபத்தில் பரிதாபமாக உயிரிழந்த ஈரான் இஸ்லாமிய குடியரசின் அதிபர் டாக்டர். செய்யத் இப்ராஹிம் ரைசி மற்றும் ஈரான் இஸ்லாமிய குடியரசின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஹுசைன் அமீர்-அப்துல்லாஹியான் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக, 2024 மே 21 அன்று இந்திய அரசு ஒரு நாள் தேசிய துக்க தினமாக அறிவித்துள்ளது. இந்தியா முழுவதும் துக்க தினத்தன்று வழக்கமாக பறக்கும் தேசியக் கொடி அனைத்து கட்டிடங்களிலும் அரைகம்பத்தில் பறக்கவிடப்படும். மேலும் அன்றைய தினம் அதிகாரப்பூர்வமான பொழுதுபோக்குகள் எதுவும் இருக்காது.

இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கர் ஆகியோர் மேன்மைதங்கிய டாக்டர். செய்யத் இப்ராஹிம் ரைசி மற்றும் HE ஹுசைன் அமீர்-அப்துல்லாஹியான் ஆகியோரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர். இந்தியா-ஈரான் உறவுகளை வலுப்படுத்துவதில் இரு தலைவர்களும் ஆற்றிய முக்கிய பங்கை அவர்கள் தங்கள் செய்திகளில் குறிப்பிட்டுள்ளனர்.

**புது தில்லி**
**மே 20, 2024**